# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 361 | 4 Pages | 23.7.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 361 | 4 பக்கங்கள் | 23.7.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வங்காளதேசத்தில் இருந்து இதுவரை 4,500 இந்திய மாணவர்கள் நாடு திரும்பியுள்ளனர் மத்திய அரசு





புதுடெல்லி, ஜூலை 23

வங்காளதேசத்தில் அரசுக்கு எதிராக மாணவர்களின் போராட்டம் வன்முறையாக மாறியுள்ளது. இந்த வன்முறையில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்னர். இந்த வன்முறை காரணமாக வங்காளதேசத்தில் கல்வி பயின்று வரும் இந்திய மாணவர்கள் தாயகம் திரும்பி வருகின்றனர்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "இதுவரை, 4,500க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் நாடு திரும்பியுள்ளனர். இந்தியர்கள் எல்லை தாண்டிய இடங்களுக்கு பாதுகாப்பாக பயணிக்க இந்திய தூதரகம் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது. டாக்காவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் சிட்டகாங், ராஜ்ஷாஹி, சில்ஹெட் மற்றும் குல்னா ஆகிய இடங்களில் உள்ள துணை தூதரகங்கள் இந்தியர்கள் தாயகம் திரும்புவதற்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றன.

வெளிவிவகார அமைச்சகம், தரை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில்நமதுகுடிமக்கள்சுமூகமாகசெல்வதைஉறுதிசெய்வதற்காக சம்பந்தப்பட்ட இந்திய அதிகாரிகளுடன் ஒருங்கிணைத்து வருகிறது. நேபாளத்தைச்சேர்ந்த 500 மாணவர்களும், பூட்டானின் 38 மாணவர்களும், மாலத்தீவு மாணவர்களும் இந்தியா வந்துள்ளனர். வங்காளதேசத்தில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் மீதமுள்ள மாணவர்களுடனும், அவர்களின் நலன் மற்றும் உதவிகளுக்காக இந்திய நாட்டவர்களுடனும் அவர்கள் தொடர்ந்து தொடர்பில் உள்ளனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மைக்ரோசாப்ட் சர்வர் முடக்கம்: சேவைகளை மீட்டெடுக்க நிபுணர்கள் படை விரைவு




புதுடெல்லி, ஜூலை 23

அமெரிக்காவின் முன்னணி மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்டின் தொழில்நுட்ப சேவை கடந்த 18ந் தேதி பாதிக்கப்பட்டது. இதனால் உலகம் முழுவதும் 85 லட்சத்துக்கும் அதிகமான கணினி சாதனங்கள் செயலிழந்தன. அவற்றின் வழியாக வழங்கப்பட்ட போக்குவரத்து, வணிகம், அலுவல் பணிகள் போன்றவையும் முடங்கின. இதனால் தமிழகம் வர இருந்த விமானங்கள் உள்பட பல்வேறு சேவைகள் பாதிக்கப்பட்டன. வர்த்தகமும் முடங்கியது.

மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன், இணைய பாதுகாப்பு சேவைக்காக இணைந்து செயலாற்றும் 'கிரவுடுஸ்டிரைக்' என்னும் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஏற்பட்ட கோளாறுகளே இந்த சேவை முடக்கத்துக்கு காரணம் என தெரியவந்தது. அந்த நிறுவனம், சில மேம்பாட்டு பணிகளை செய்தபோது, அதன் சூப்பர் கம்ப்யூட்டர்கள் 'ரீஸ்ட்டார்ட்' ஆனதால் இந்த செயலிழப்பு ஏற்பட்டதாக தெரியவந்தது.

இதனால் உலகம் முழுவதும் மைக்ரோசாப்ட் அசூர், ஆபீஸ் 365 சேவைகளைபயன்படுத்தும்நிறுவனங்களின்செயல்பாடுகள்முற்றிலுமாக முடங்கின. பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள், தனிநபர்கள் பயன்படுத்தும் மைக்ரோசாப்ட் மென்பொருளில் இயங்கும் கணினி, மடிக்கணினிகளில் நீல திரை தோன்றி, 'கணினி செயலிழந்துள்ளது' என்பதை காட்டியது.

இதையடுத்துஅதன்கோளாறுகளைசரிசெய்துசேவைகளைமீட்டெடுக்க, மைக்ரோசாப்ட் நிறுவனம் தங்களது நூற்றுக்கணக்கான என்ஜினீயர்கள் மற்றும் நிபுணர்களை கொண்ட தொழில்நுட்ப படையை அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் மூலம் சீரமைப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அமெரிக்கா: சிறிய ரக விமானம் விபத்தில் சிக்கி ஒருவர் பலி

நியூயார்க், ஜூலை 23

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நையாகரா கவுன்டி பகுதியில், ஸ்கை டைவிங் எனப்படும் வான்வெளியில் சாகசத்தில் ஈடுபடும் பயிற்சி பெறுபவர்களை சுமந்து கொண்டு சிறிய ரக விமானம் ஒன்று சென்றது.

ஒற்றை இயந்திரம் கொண்ட செஸ்னா 208பி என்ற அந்த விமானம், பயிற்சியாளர்கள் அனைவரையும் விடுவித்து விட்டு, மீண்டும் தரைக்கு திரும்பியது.

அப்போது, யங்ஸ்டவுன் பகுதியருகே லேக் சாலையருகே அந்த விமானம் விபத்தில் சிக்கியது. இதில், விமானத்தில் பயணித்த விமானி பலியானார். எனினும், விபத்துக்கு முன் விமானத்தில் எத்தனை பயிற்சியாளர்கள் இருந்தனர் என்ற விவரம் தெளிவாக தெரிய வரவில்லை என்று நையாகரா கவுன்டியின் ஷெரீப் மைக்கேல் பிலிசெட்டி கூறியுள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அதுபற்றி விசாரணை நடந்து வருகிறது. விமானம், விமானி மற்றும் காலநிலை என 3 முக்கிய காரணிகளின் அடிப்படையில் விபத்துக்கான காரணம் பற்றி விசாரணை நடைபெறும்.

ஸ்கை டைவிங் என்பது விமானத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, அதில் இருந்து கீழே குதித்து பின்னர் தரைக்கு வருவதற்கு முன் பாராசூட் உதவியுடன் பாதுகாப்பாக தரையில் இறங்கும் சாகச விளையாட்டு ஆகும். இதற்கான பயிற்சியில் ஈடுபடுபவர்களின் வசதிக்காக, அவர்களுக்கு பயிற்சி அளிக்க என பல மையங்கள் அந்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

# மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கான திட்டங்கள்

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 23

தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை மத்திய அரசு நிறைவுசெய்யும்என்றுநம்புவதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட் நாளை மறுநாள் தாக்கல் செய்யப்பட உள்ளநிலையில்,தமிழகமக்களின் எதிர்பார்ப்பை மத்திய அரசு நிறைவேற்றுமென நம்புவதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட்டில்

★மூன்றுஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான நிதி

★ தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல்

★ பத்தாண்டுகளாக வருமான வரிச் சுமை குறைக்கப்படும் என்ற நடுத்தரக் குடும்பங்களின் எதிர்பார்ப்பு

★ கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான ஒப்புதல்

★ தமிழ்நாட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் புதிய ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திடப் போதிய நிதி ஒதுக்கீடு

★ கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல்

உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவு செய்யும் என்று நம்புகிறேன்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## மஞ்சக்குடி சுவாமி தயானந்த சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகாபாரத கண்காட்சி




திருவாரூர், ஜூலை 24

திருவாரூர்மாவட்டம், குடவாசல் தாலுகா, மஞ்சக்குடி சுவாமி தயானந்தாகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த வாரம் முழுவதும் மாபெரும் மகாபாரத கண்காட்சி கல்லூரியின் ஜி ஆர் கலையரங்கில் சமஸ்கிருத துறையின் சார்பில் நடைபெற்றது. முன்னதாக கல்லூரியின் செயலர் மற்றும் அறங்காவல் துறையின் தலைவர் திருமதி ஷீலா பாலாஜி தலைமை தாங்கி இந்நிகழ்வினை துவங்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹேமா வரவேற்புரை வழங்கினார். கல்லூரியில் தாளாளர் திரு சீனிவாசன் மாணவர்களுக்கு மகாபாரத உள்ளார்ந்த தத்துவங்களை விளக்கினார். கல்லூரியின் சமஸ்கிருதத் துறை தலைவர் பேராசிரியர் சேஷாத்திரி மற்றும் பேராசிரியர் பரணிதரன் தலைமையிலான சமஸ்கிருத மாணவர்கள் இந்நிகழ்வினை தத்ரூபமாக காட்சி அமைப்புகளுடன் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வின் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மகாபாரத கதையினை ஒட்டிய பல்வேறு காட்சி அமைப்புகள், 18 நாள் போர் முறை அமைப்புகள், ஆயுதங்கள், பீஷ்மர்அம்புபடுக்கைபோன்றவை சிறப்பான முறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியின் மூலம் நாம் வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் போன்றவை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களால் விளக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். இறுதியாக சமஸ்கிருதத் துறை தலைவர் பேராசிரியர் சேஷாத்திரி நன்றி உரை ஆற்றினார்

## பள்ளி கட்டிடம் திறப்பு விழா: அமைச்சர் கணேசன், கடலூர் எம்பி திறந்து வைத்தனர்



வேப்பூர், ஜூலை 23

கடலூர் மாவட்டம் நல்லூர் ஒன்றியத்தில் ராயல் என்ஃபீல்டு நிதியுதவியுடன், ரியல் சமூக சேவை நிறுவனம் மூலம் கட்டப்பட்ட 1.27 லட்சம் மதிப்பீட்டிலான நான்கு பள்ளி கட்டிடம் கொடிக்களம், கூடலூர், மருதத்தூர், நரசிங்கமங்கலத்தில் கட்டப்பட்டது.

இந்த கட்டிடத்தை, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் திறந்து வைத்து, கட்டிடத்தை முறைப்படி பள்ளி கல்வித்துறையிடம் ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில்கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், ராயல் என்ஃபீல்டு, வல்லம் டிவிடி பிளான்ட் மனிதவள முதன்மை மேலாளர் செந்தில் வேல், ஈச்சர் குரூப் பவுண்டேஷன் அலெக்ஸ் விஜய், மாவட்ட கல்வி அலுவலர் சேகர், வட்டார கல்வி அலுவலர் நளினி, நல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவதியாகராஜன், வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி நரசிங்கமங்கலம் ஊராட்சிமன்றதலைவர்விசாலாட்சி சுப்பிரமணியன், மருதத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், கூடலூர் ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன், கொடிக்களம் ஊராட்சி மன்ற தலைவர் சிவராம சேது, தலைமை ஆசிரியர்கள் குளோரிதங்கம், இராமலட்சுமி,சுமதி, ரியல் நிறுவனத்தின் இயக்குனர்லாரன்ஸ், மற்றும் நிர்வாகிகள் குமார், விஜயா, ரீனா மேரி, மகாலஷ்மி, கிரிஜா, விஷாந்துராஜ் மற்றும் கிராம பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சார்பு நீதிமன்றத்தினை உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.ஏ.நக்கீரன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். உடன் முதன்மை மாவட்ட நீதிபதி அறிவொளி, கலெக்டர் ஷஜீவனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருநின்றவூர் அருகே மருத்துவக் கல்லூரி மாணவர் தற்கொலை

ஆவடி, ஜூலை 23

தருமபுரி மாவட்டம் அதங்கம்பாடி அடுத்த ஏரிக்கோடி பகுதியைச் சேர்ந்தவர் முருகேசன். இவரது மகன் ஆனந்தன் (21 வயது). திருவள்ளூர் அடுத்த திருநின்றவூர் தேவி நகர் பகுதியில் கல்லூரி நண்பர்கள் 4 பேருடன்தங்கி இருந்து அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியில் பி.பார்ம் படித்து வந்தார். இவருடன் தங்கி இருந்த நண்பர்களில் இருவர் ஊருக்கு சென்று விட்டனர். இந்நிலையில் ஆனந்தன் மற்றும் அவரது நண்பர் சண்முகம் ஆகிய இருவர் மட்டும் அறையில் தங்கி இருந்தனர்.

காலை ஆனந்தன் தனது தாயாருக்கு போன் செய்து தனக்கு உடல் நலம் சரியில்லை நான் ஊருக்கு புறப்பட்டு வருகிறேன் என்று கூறியுள்ளார்.

பின்னர் வழக்கம் போல் ஆனந்தன் கல்லூரிக்கு சென்றார். 2 மணி நேரம் மட்டுமே கல்லூரியில் இருந்த ஆனந்தன் ஆசிரியரிடம் தனக்கு உடம்பு சரி இல்லை என்று கூறி காலை 11 மணிக்கு விடுமுறைகடிதம்கொடுத்துவிட்டு தான் தங்கி இருந்த அறைக்கு வந்து விட்டார்.

அவருடன்தங்கி இருந்த சண்முகம்கல்லூரிமுடிந்து மாலை வீட்டுக்கு வந்த போது உள்தாழ்ப்பாள்



போடப்பட்டிருந்தது. நீண்ட நேரம் கதவை தட்டியும் திறக்காததால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களின் உதவியுடன் சண்முகம்ஜன்னல்கதவை உடைத்து உள்ளே பார்த்த போது ஆனந்தன் மின்விசிறியில் தூக்கில் தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த திருநின்றவூர் போலீசார்,

கதவை உடைத்து உள்ளே சென்று தற்கொலை செய்து கொண்ட ஆனந்தன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து அவரது தற்கொலைக்கான காரணம்குறித்துவிசாரித்து வருகின்றனர்.

## கிளாம்பாக்கத்தில் அரசுப் பேருந்துகளை சிறைப்பிடித்து பயணிகள் போராட்டம்

### போலீசார் பேச்சுவார்த்தை



சென்னை, ஜூலை 23

சென்னையை அடுத்த கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில், அரசுப் பேருந்துகளை சிறைப்பிடித்து பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையித்தில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அரசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இன்று பவுர்ணமி தினம் என்பதால் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

இந்த நிலையில் பவுர்ணமி தினம் என்பதால் திருவண்ணாமலைக்கு அதிகளவில் பேருந்துகள் இயக்கப்படுவதாகவும், பிற ஊர்களுக்கு குறைந்த அளவிலேயே பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் பயணிகள் புகார் தெரிவித்தனர். குறிப்பாக கள்ளக்குறிச்சி, உளுந்தூர் பேட்டை, ஜெயங்கொண்டான், பண்ருட்டி, கடலூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் இல்லாததால் பயணிகள் அவதியடைந்தனர்.

இந்த நிலையில் சொந்த ஊர் செல்ல போதிய அரசு பேருந்துகள் இல்லை என்று குற்றம்சாட்டிய பயணிகள்,

அரசுப் பேருந்துகளை சிறைப்பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், இரவு 10 மணி முதல் பேருந்துக்காக குழந்தைகளுடன் காத்திருப்பதாகவும் பயணிகள் வேதனை தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் பயணிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

## காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி பிளஸ் 1 மாணவியை கர்ப்பமாக்கிய வாலிபர் கைது

காரியாபட்டி, ஜூலை 23

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர், தனியார் பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார். அதே பகுதியில் குடிநீர் கேன் வினியோகம் செய்யும் தனியார் நிறுவனத்தில் கானா விலக்கு பகுதியைச் சேர்ந்த முத்துராஜ் (24 வயது) என்பவர், வேலை பார்த்து வந்தார்.

வீடுகளுக்கு குடிநீர் கேன் கொண்டு சென்ற போது, அந்த பிளஸ்1 மாணவியுடன், முத்துராஜூவுக்கு பழக்கம் ஏற்பட்டது. அந்த மாணவியிடம் காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார். செல்போனிலும் அதிக நேரம் பேசி வந்துள்ளார். மாணவியை ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். மாணவி கர்ப்பம் அடைந்ததை அறிந்து, அவரது தாயார் அதிர்ச்சி அடைந்தார். இதனையடுத்து மாணவியை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இதுகுறித்து மாணவியின் தாயார் எம்.ரெட்டியபட்டி போலீசில் அளித்த புகாரின் அடிப்படையில், மாணவியை காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி கர்ப்பிணியாக்கியது குறித்து போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து முத்துராஜை கைது செய்தனர்.

## ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான ஹரிதரன் அதிமுகவில் இருந்து நீக்கம்

சென்னை, ஜூலை 23

சினிமா காட்சிகளை மிஞ்சும் வகையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அதிரடி திருப்பங்கள் அரங்கேறி வருகிறது. அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றிய அ.தி.மு.க. கவுன்சிலர் ஹரிதரன் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கில் ஏற்கனவே கைதாகி உள்ள வக்கீல்களான அருண், ஹரிஹரன் ஆகிய 2 பேருக்கும் இவர் நெருங்கியநண்பர்ஆவார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு குற்றவாளிகள் பயன்படுத்திய 6 செல்போன்கள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணையில் இவர் இந்த செல்போன்களை சேதப்படுத்தி திருவள்ளூர் மாவட்டம் வெங்கத்தூர் அருகே உள்ள கொசஸ்தலை ஆற்றில் வீசி இருப்பது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து தனிப்படை போலீசார் நீச்சல் பயிற்சிபெற்றதீயணைப்பு வீரர்கள் உதவியுடன் ஆற்றில் வீசப்பட்ட 6 செல்போன்களில் 3 செல்போன்களை மீட்டுள்ளனர். இந்த செல்போன்களில் உள்ள



தரவுகளையும், ஆற்றில் வீசப்பட்டுள்ள மற்ற செல்போன்களையும் மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையில் தனிப்படை போலீசார் ஈடுபட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள ஹரிதரனும் வக்கீல் என்பதுகுறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஹரிதரன் அதிமுகவில் இருந்து நீக்கி கட்சி தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது. கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதால் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் ஹரிதரன் நீக்கப்படுவதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

## திருமணம் செய்வதாக கூறி பயிற்சி பெண் டாக்டரிடம் உல்லாசம்: டாக்டர் மீது வழக்குப்பதிவு

கோவை, ஜூலை 24

கோவையை சேர்ந்த பயிற்சி பெண் டாக்டர் ஒருவர் கோவை கிழக்கு அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

நான் வெளிநாட்டில் எம்.பி.பி.எஸ். படித்து விட்டு கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் நீலகிரிமாவட்டம்ஊட்டி அரசு ஆஸ்பத் திரியில் பயிற்சி டாக்டராக பணியாற்றினேன். அங்கு டாக்டராக பணியாற்றிய ஷியாம் சுந்தர் (வயது 30) என்பவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. அப்போது அவர், தனக்கு திருமணம் ஆகவில்லை என்றும் என்னை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் ஆசை வார்த்தை கூறினார். மேலும் அவர் என்னை அவரது காரில் ஊட்டியில் பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்றார்.

நாங்கள் இருவரும் காரிலேயே நெருக்கமாக இருந்தோம். எனது கணவராக வரப்போகிறவர் என்பதால் உல்லாசம் அனுபவிக்க நான் அனுமதித்தேன்.

பின்னர் அவர் கோவை வரதராஜபுரத்தில் உள்ள இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு பணி மாறுதலாகி சென்றார். நானும்பயிற்சியை முடித்துக்கொண்டு கோவை திரும்பினேன்.

கோவை வந்ததும் ஷியாம் சுந்தர் அடிக்கடி என்னைகாரில் வெளியே அழைத்து செல்வார். அவர், கடந்த பிப்ரவரி மாதம் 27ந் தேதி கோவையில் ஒரு ஓட்டலில் கணவன்மனைவி என்று பதிவேட்டில் பதிவு செய்து அறை எடுத்து என்னிடம் உல்லாசமாக இருந்தார். இதைத்தொடர்ந்து ஷியாம் சுந்தரிடம் எப்போது என்னை திருமணம் செய்து கொள்ள போகிறீர்கள் என்றும், எனது வீட்டிற்கு வந்து பெண் கேளுங்கள் என்றும் கூறினேன்.

அதன் பிறகு அவர் என்னிடம்பேசுவதைநிறுத்தி விட்டார். அதன்பிறகு தான் ஷியாம் சுந்தருக்கு ஏற்கனவே திருமணமாகி மனைவி, ஒரு ஆண் குழந்தை இருப்பது எனக்கு தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த நான்கடந்த மே மாதம் 18ந் தேதி சுங்கத்தில் உள்ள ஷியாம் சுந்தர் வீட்டிற்கு சென்று நடந்ததை கூறினேன். அங்கு இருந்த ஷியாம் சுந்தரின் தாய், அக்கா, அவரது மாமா ஆகியோர் என்னை திட்டி அனுப்பி விட்டனர். திருமணமாகி குழந்தை இருப்பதை மறைத்து என்னை ஏமாற்றிய இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி டாக்டர் ஷியாம் சுந்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் அவர் கூறி உள்ளார்.

அதன் பேரில் கோவை அனைத்து மகளிர் போலீசார் ஷியாம் சுந்தர் மீது நம்பிக்கை மோசடி, பொதுஇடத்தில் ஆபாச செயல் புரிதல், பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கவுரவ விரிவுரையாளர்களின் ஊதியத்தை ரூ.50,000 ஆக உயர்த்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 23

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் கலை அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் ஊதியம் மதிப்பூதியம் அல்ல... அவமதிப்பூதியம் என்றும், உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படும் அவர்களின் ஊதியத்தை ரூ.50,000 ஆக உயர்த்த வேண்டும் என்றும் ஐகோர்ட்டு மதுரை கிளை பரிந்துரைத்திருக்கிறது. ஐகோர்ட்டின் தீர்ப்பை செயல்படுத்த வேண்டிய தமிழக அரசு, வழக்கமாக வழங்க வேண்டிய ஊதியத்தைக் கூட கடந்த 3 மாதங்களாக வழங்காமல் இருப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் உள்ள 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 7,314 கவுரவ விரிவுரையாளர்கள் மதிப்பூதியத்தின் அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். கல்லூரிகளின் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு தேவையான தகுதியும், அனுபவமும் இருக்கும் போதிலும், அவர்களுக்கு மாதம் ரூ.20,000 மட்டுமே மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு பாடவேளைக்கு ரூ.1,500 வீதம் மாதத்திற்கு அதிகபட்சமாக ரூ.50,000 மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு கடந்த 28.01.2019ம் தேதி ஆணையிட்டது. அதை தமிழக அரசு செயல்படுத்தாத நிலையில், அந்த நாளில் இருந்து பல்கலைக் கழக மானியக்குழுவின் ஆணைப்படி ஊதியத்தை உயர்த்தி வழங்க ஆணையிட வேண்டும் என்று கவுரவ விரிவுரையாளர்கள் சங்கம் தொடர்ந்த வழக்கில் அண்மையில் தீர்ப்பளித்த ஐகோர்ட்டு மதுரை கிளை, தமிழக அரசை கடுமையாக விமர்சித்தது. மேலும் பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்தவாறு கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

21.03.2024ம் தேதி நீதிமன்றம் இத்தீர்ப்பை அளித்த நிலையில், இன்றுடன் 4 மாதங்களாகியும் தீர்ப்பை செயல்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது அவர்களுக்கு இழைக்கப்படும் மிகக் கொடிய சமூகஅநீதி. நீதிமன்ற தீர்ப்பின்படி கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டிய தமிழக அரசு, அவர்களுக்கு வழக்கமாக வழங்க வேண்டிய ஊதியத்தையே கடந்த 3 மாதங்களாக வழங்கவில்லை.

கவுரவ விரிவுரையாளர்கள் ஆண்டு முழுவதும் பணியாற்றினாலும், அவர்களுக்கு ஜூன் முதல் ஏப்ரல் மாதம் வரை 11 மாதங்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படும். மே மாதத்திற்கு ஊதியம் கிடையாது. ஏப்ரல் மாதத்திற்கான ஊதியத்திற்கு கூட, புதிய நிதியாண்டு பிறந்த பிறகு தான் நிதி ஒதுக்கப்படும் என்பதால் அந்த ஊதியம் ஜூன் மாதத்தில் தான் வழங்கப்படும். ஆனால், நடப்பாண்டில் ஜூலை மாதம் நிறைவடையவிருக்கும் நிலையில், இப்போது வரை மதிப்பூதியம் வழங்கப்படவில்லை.



கவுரவ விரிவுரையாளர்களுக்கான ஊதிய நிலுவை ஒவ்வொரு ஆண்டும் தொடர்கதையாகிக் கொண்டே செல்கிறது. கவுரவ விரிவுரையாளர்களுக்கான ஊதியத்தை அவர்கள் பணி செய்த மாதத்தின் கடைசி நாளில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒவ்வொரு ஆண்டும் வலியுறுத்தி வருகிறேன். ஆனால், அதை செய்யத் தமிழக அரசு தயாராக இல்லை. மாதம் ரூ.20,000 ஊதியம் ஈட்டுபவர்களால் 3 மாதங்களாக ஊதியமின்றி எவ்வாறு வாழ்க்கையை நடத்த முடியும்? என்ற புரிதல் ஆட்சியாளர்களுக்கு இருந்தால் ஊதியத்தை உடனே வழங்கியிருப்பர்; ஆனால், அவர்களுக்கு அந்தப் புரிதல் சிறிதும் இல்லை.

இந்தியாவிலேயே கவுரவ விரிவுரையாளர்களுக்கு மிகக்குறைந்த ஊதியம் வழங்கும் மாநிலம் தமிழ்நாடு தான். 15 ஆண்டுகளுக்கு முன் ரூ.10,000 என்ற ஊதியத்தில் பணியில் சேர்ந்த கவுரவ விரிவுரையாளர்களின் ஊதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு தான் ரூ.20 ஆயிரம் என்ற நிலையை எட்டியது. அதையும் ஆண்டுக்கு ஒரு மாதம் வழங்க மறுப்பதும், மாதக் கணக்கில் நிலுவை வைப்பதும் நியாயமல்ல. தமிழக அரசே கவுரவ விரிவுரையாளர்களின் உழைப்பைச் சுரண்டக் கூடாது.

கவுரவ விரிவுரையாளர்களுக்கு பல ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வரும் சமூகநீதியை வழங்கும் வகையில், அவர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவையை இம்மாத இறுதிக்குள் வழங்க வேண்டும். அதுமட்டுமின்றி, பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைப்படி கவுரவ விரிவுரையாளர்களின் ஊதியத்தை ரூ.50,000 ஆக உயர்த்த வேண்டும் என்ற ஐகோர்ட்டு மதுரை கிளையின் பரிந்துரையை செயல்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொற்பனைக்கோட்டை அகழாய்வில் முன்னோர்கள் பயன்படுத்திய ஆணி கண்டுபிடிப்பு



புதுக்கோட்டை, ஜூலை 23

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் தொல்லியல் துறையின் மூலம் அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

பொற்பனைக்கோட்டையில் 2ம் கட்ட அகழாய்வை கடந்த மாதம் 18ம் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது முன்னோர்கள் பயன்படுத்திய செம்பு ஆணி கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. மொத்தம் 5 ஆணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 2.3 செ.மீ. ஆகவும், அகலம் 1.2 செ.மீ ஆகவும் எடை 2 கிராம் ஆகவும் உள்ளது. தொடர்ந்து அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

## தமிழகத்தில் 5,146 தற்காலிக ஆசிரியர் பணியிடங்கள் நிரந்தரம் : பள்ளிக்கல்வித்துறை உத்தரவு

சென்னை, ஜூலை 23

தமிழகத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிகளில் 5,146 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களை நிரந்தரம் செய்து தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழகத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 201112ம் நிதியாண்டில் அரசு நடுநிலைப் பள்ளிகளில் 1,581 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 3,565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம்




5,146 ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

இந்த தற்காலிக பணியிடங்களுக்கான தொடர்நீட்டிப்பு காலம் கடந்த டிசம்பர் மாதத்துடன் நிறைவு பெற்றது.

இதற்கிடையே தேவை அடிப்படையில் இந்த 5,146 தற்காலிக பணியிடங்களையும் நிரந்தரமாக்க தொடக்கக் கல்வி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பினார்.

அதை ஏற்று நிதித்துறை ஒப்புதலுடன் 10 ஆண்டுகளுக்கு மேல் தற்காலிக அடிப்படையில் உள்ள 1,581 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 3,549 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக மாற்றி அமைக்க ஆணையிடப்படுகிறது.

இதில் 5 ஆண்டுகளுக்கு மேல் நிரப்படாமல் உள்ள 16 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை புத்தாக்கம் செய்து நிரந்தரப் பணியிடங்களாக மாற்றம் செய்யவும் உத்தரவிடப்படுகிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதுமலை புலிகள் காப்பகத்தில் சூழல் சுற்றுலா ரத்து

நீலகிரி, ஜூலை 23

நீலகிரி மாவட்டம் மலைப்பிரதேசமாக உள்ளது. இது தவிர சுற்றுலா தலங்களை உள்ளடக்கியதால் தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து குளிர்ந்த காலநிலையை உணருகின்றனர். இந்த நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக ஊட்டி, கூடலூர் பந்தலூர் தாலுகா பகுதிகளில் தொடர் கன மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள்சரிந்துவிழுகிறது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

மேலும் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமான இடங்களில் மரக்கிளைகள் முறிந்து மின் கம்பங்கள் சேதம் அடைந்துள்ளது. இதன் காரணமாக கூடலூர் சுற்று



வட்டார பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சிங்கார மின் உற்பத்தி நிலையத்தில் திடீரென ஏற்பட்ட பழுதால் கூடலூர் பந்தலூர் தாலுகா பகுதியில் உள்ள 700க்கும் மேற்பட்ட கிராமங்கள் நேற்று முன்தினம் இருளில் மூழ்கியது.

இதனிடையே கூடலூர் பகுதியில் தொடர் கனமழையால் முதுமலை புலிகள் காப்பக பகுதியிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து நேற்று முதல் வருகிற 22ந்தேதி வரை முதுமலை புலிகள் காப்பகம் மூடப்படுகிறது என வனத்துறை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து புலிகள் காப்பக துணை இயக்குனர் வித்யா, முதுமலை வரவேற்பு வனச்சரகர் சிவக்குமார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

"நீலகிரி மாவட்டத்தில் கனமழை மற்றும் பலத்த காற்று இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முதுமலை தெப்பகாட்டில் கடந்த ஒரு வார காலமாக கனமழை காரணமாக மின்சாரம் மற்றும் தண்ணீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் மழை தொடர்ந்து நீடிக்கும் காரணத்தால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி தெப்பக்காட்டில் இயங்கி வரும் சூழல் சுற்றுலா இன்று (20ந் தேதி) முதல் வருகிற 22ந்தேதி வரை மூடப்படுகிறது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருட சென்ற கடைக்குள் அசந்து தூங்கிய வாலிபர்... அலேக்காக தூக்கிய போலீஸ்


தேனி, ஜூலை 23

தேனி பங்களாமேடு டி.பி. மேற்குத்தெருவை சேர்ந்தவர் ராஜேந்திரன் (வயது 61). இவர், தனது வீட்டுக்கு அருகே மளிகை கடை நடத்தி வருகிறார். தினமும் இரவு இவர், தனது கடையை பூட்டிவிட்டு மறுநாள் அதிகாலை வந்து திறப்பது வழக்கம்.

அதன்படி நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கடையை பூட்டிவிட்டு ராஜேந்திரன் வீட்டுக்கு தூங்கச் சென்றார். நேற்று அதிகாலை 5 மணியளவில் கடையை திறக்க வந்தார். கடையின் இரும்பு ஷட்டர் கதவை திறந்து உள்ளே சென்ற போது, உள்ளே வாலிபர் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த ராஜேந்திரன் சத்தம் போட்டார். அவரது சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர். இதனையடுத்து அந்த வாலிபரும் எழுந்து தப்பி ஓட முயன்றார்.

பின்னர் அவரை அக்கம் பக்கத்தினர் உதவியுடன் பிடித்து தேனி போலீஸ் நிலையத்தில் ராஜேந்திரன் ஒப்படைத்தார். போலீசார் நடத்திய விசாரணையில், அவர் தேனி பவர் ஹவுஸ் தெருவை சேர்ந்த விஸ்வநாத் (25) என்பதும், கடையில் தகரத்தால் ஆன மேற்கூரையை பிரித்து உள்ளே சென்று திருட முயன்றதும் தெரிய வந்தது.



இது குறித்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தவசிராஜன் வழக்குப் பதிவு செய்து விஸ்வநாத்தை கைது செய்தனர். மேலும் இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறும் போது, 'விஸ்வநாத் மீது பெரியகுளம், தென்கரை போலீஸ்நிலையங்களில் திருட்டு வழக்குகள் உள்ளன. தற்போது மளிகைக் கடையின் மேற்கூரையை பிரித்து திருடச் சென்றுள்ளார். அப்போது அவர் மதுபோதையில் இருந்ததாக தெரிகிறது. போதையில் அங்கேயே தூங்கி விட்டார். அதிகாலையில் கடையின் உரிமையாளர் கடையை திறக்கச் சென்ற போது சிக்கிக் கொண்டார்' என்றனர்.

# அளவுக்கு அதிகமாக இருமல் மருந்து சாப்பிட்ட சிறுமி உயிரிழப்பு

மதுரை, ஜூலை 23

மதுரை தபால்தந்தி நகர் பாமாநகரைச் சேர்ந்தவர் அலெக்ஸ்பாண்டி. இவருடைய மனைவி சடையீஸ்வரி. இவர்களுக்கு, 4 வயதில் சிவரஞ்சனி என்ற மகளும், 9 மாதத்தில் சிவதாரணி என்ற மகளும் இருந்தனர். கடந்த 2 நாட்களாக சிறுமி சிவரஞ்சனிக்கு காய்ச்சல், சளி இருந்துள்ளது. அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்துள்ளனர்.

இருப்பினும் தொடர்ந்து சிறுமிக்கு காய்ச்சல், சளி இருந்துள்ளது. இதனால், வீட்டில் இருந்த இருமல் டானிக்கை சிறுமிக்கு கொடுத்ததாக தெரிகிறது. குணமடையாததால், சிறுமியை மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்தபோது வரும் வழியில் சிறுமி இறந்தது தெரியவந்தது.

முதற்கட்ட விசாரணையில், அளவுக்கு அதிகமாக இருமல் மருந்து சாப்பிட்டதால் உயிரிழந்தது தெரியவந்தது. இதுகுறித்து தல்லாகுளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு

மதுரை, ஜூலை 23

மதுரை விமான நிலையத்தில், முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மத்திய அரசு, பட்ஜெட் தாக்கல் செய்ய இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இருந்ததுபோல் இந்த ஆண்டும் பட்ஜெட் சிறப்பாக இருக்கும். இனி வருகிற 10 ஆண்டுகளில், இந்தியா தன்னிறைவு பெற்ற நாடாக இருக்கும் என்று பிரதமர் மோடி ஏற்கனவே அறிவித்திருந்தார். அந்த அடிப்படையில் மத்திய பட்ஜெட்டு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தி.மு.க. அரசு, மின்சார கட்டணத்தை, அடிக்கடி உயர்த்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் மிகப் பெரிய சுமையை தந்திருக்கிறது. காவிரி விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டில் போராடி பெற்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு மாநில அரசுக்கு உள்ளது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியா கூட்டணியில் இருப்பதால், தன் செல்வாக்கை வைத்து கர்நாடக அரசுக்கு அழுத்தம் கொடுத்து நீரை பெற்றுத்தர முனைப்பாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அரசியல் கட்சியும், தேர்தலுக்கு முன்பு நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று கூறுவது வாடிக்கையானது. ஆனால் இறுதி தீர்ப்பு மக்கள் கையில் தான் உள்ளது. அம்மா உணவகம் மட்டுமல்லாமல், முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா காலத்தில் கொண்டுவரப்பட்ட நலத்திட்ட உதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த கோபங்கள் மக்கள் மனதில் இருக்கிறது. அது வரக்கூடிய தேர்தலில் எதிரொலிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.


# வெளியூர் சென்ற மனைவி: வீட்டில் நடந்த மது விருந்து.. குத்திக்கொலை செய்யப்பட்ட புதுமாப்பிள்ளை

கன்னியாகுமரி, ஜூலை 23

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள அமராவதியை சேர்ந்தவர் மகேஷ்(38). இவர் வெளிநாட்டில் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வந்தார். ஏற்கனவே திருமணமான இவர், மனைவியை விவாகரத்து செய்துவிட்டு சென்னையை சேர்ந்த ஷோபி (36) என்பவர் 2வதாக திருமணம் செய்தார். ஷோபிக்கும் இது 2வது திருமணமாகும். மஸ்கட்டில் அழகு கலைஞராக வேலை பார்த்த ஷோபியுடன், விமானத்தில் ஏற்பட்ட பழக்கம் மூலம், கடந்த 5 மாதங்களுக்கு முன்பு மகேஷ் திருமணம் செய்து கொண்டார்.

அவர்கள் 2 பேரும் தக்கலை அருகே உள்ள வட்டம் அண்ணாநகரில் ஒரு வீட்டின் மாடியில் வாடகைக்கு குடியேறினர். இதற்கிடையே கடந்த 4 தினங்களுக்கு முன்பு ஷோபி மட்டும் சென்னையில் உள்ள அவரது பெற்றோர் வீட்டுக்கு சென்றார். இதனால் வீட்டில் மகேஷ் மட்டும் தனியாக இருந்தார்.

இந்தநிலையில் நேற்று காலையில் மகேஷின் அக்காள் மகன் அவரை செல்போனில் அழைத்தார். ஆனால் அவர் போனை எடுத்து பேசவில்லை. இதனால் அக்காள் மகன் காலை 11 மணிக்கு மகேஷ் தங்கியிருந்த வீட்டுக்கு வந்து பார்த்தார். அப்போது மகேஷ் ரத்த காயங்களுடன் பிணமாக கிடந்தார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த அவர் உடனே இதுகுறித்து உறவினர்களுக்கும், தக்கலை போலீசாருக்கும் தகவல் கொடுத்தார்.



இதுபற்றி தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். போலீசார் நடத்திய விசாரணையில் திடுக்கிடும் தகவல் வெளியானது.

அதாவது மனைவி சென்னைக்கு சென்ற பின்பு வீட்டில் தனியாக இருந்த மகேஷ் நேற்று முன்தினம் இரவு சிலரை தனது வீட்டுக்கு வரவழைத்து மதுவிருந்து வைத்துள்ளார். அங்கு அனைவரும் உற்சாகமாக மது குடித்து கொண்டிருந்தனர். போதை தலைக்கேறியதும் அவர்களுக்குள் திடீரென தகராறு ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் அனைவரும் சேர்ந்து மகேஷை கத்தியால் குத்தி கொன்றுவிட்டு தப்பியிருக்கலாம் என போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. கொல்லப்பட்ட மகேசுக்கு கழுத்து உள்பட பல்வேறு இடங்களில் கத்திக்குத்து காயங்கள் இருந்தன. மகேசுடன் மதுகுடித்தவர்கள் அவருடைய நண்பர்களாக இருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். அதன் ரீதியில் போலீசாரின் முதற்கட்ட விசாரணை தொடங்கியுள்ளது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தந்தை திட்டியதால் மனமுடைந்த 11ம் வகுப்பு மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை

விழுப்புரம், ஜூலை 23

விழுப்புரம் அருகே உள்ள சாலாமேடு என்.ஜி.ஜி.ஓ. காலனியைச் சேர்ந்தவர் மங்கள்ராஜ் மகன் கார்த்திகேயன் (17 வயது). இவர் விழுப்புரம் காமராஜர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார். சம்பவத்தன்று கார்த்திகேயனின் வீடு அருகே உள்ள மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது கார்த்திகேயனிடம் கும்பாபிஷேக நீர் வாங்கி வருமாறு அவரது தந்தை கூறினார். ஆனால் கார்த்திகேயன் செல்ல மறுத்ததால் அவரை மங்கள்ராஜ் திட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த கார்த்திகேயன் தனது ஓட்டு வீட்டில் உள்ள இரும்பு குழாயில் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கார்த்திகேயனின் தாய் விஜயலட்சுமி கொடுத்த புகாரின் பேரில் விழுப்புரம்தாலுகாபோலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பல ஆண்டுகளாக வெளியே வராமல் இருந்த தாய்மகளின் வீட்டில் 3 டன் குப்பைகள்: கோவையில் பரபரப்பு

கோவை, ஜூலை 23

கோவை காட்டூர் ராம் நகரில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றின் முதல்தளத்தில் 65 வயது மூதாட்டியும், 40 வயதான அவருடைய மகளும் வசித்து வருகிறார்கள். அவர்கள் 2 பேர் மட்டும் கதவை பூட்டிக் கொண்டு பல ஆண்டுகளாக வீட்டை விட்டு வெளியே வராமல் வசித்து வந்ததாக கூறப்படுகிறது.



அவர்கள், தாங்கள் உபயோகிக்கும் பொருட்கள், பழைய துணிகள், காகிதங்கள்மற்றும்கழிவு பொருட்கள் அனைத்தையும் வீட்டிற்குள்ளேயே போட்டு வைத்து வந்தனர். இதனால் அந்த வீடு முழுவதும் குப்பை மற்றும் கழிவுகளாக நிரம்பி கிடந்தது. மேலும் அவர்கள் அதிகம் சமையல் செய்யாமல் ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து உணவு வாங்கி சாப்பிட்டு உள்ளனர். அதில் மீதமான உணவு மற்றும் பார்சல் பொருட்களையும் வீட்டிற்குள்ளேயே போட்டு வைத்து உள்ளனர். இதனால் படுக்கை அறை, சமையல் அறை, கட்டில் என்று வீடு முழுவதும் குப்பைகள் மற்றும் கழிவுகள் குவிந்து கிடந்து துர்நாற்றம் வீசியது.

ஆன்லைன் ஆர்டரின் பேரில் உணவு கொண்டு வருபவரிடம், உணவை வாங்கியதும் கதவை பூட்டிக் கொண்டு இருந்துள்ளனர். தாய், மகள் வீட்டை விட்டு வெளியே வராமல் குப்பை மற்றும் கழிவுகளுக்கு மத்தியில் வசிப்பது சமீபத்தில் வெளியே தெரிந்தது. இதையறிந்த கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தூய்மை பணியாளர்களை அனுப்பி அந்த வீட்டில் இருந்து குப்பை, கழிவுகளை அகற்ற உத்தரவிட்டார்.

அதன்பேரில் 25 தூய்மை பணியாளர்கள் நேற்று காலை குப்பை லாரியுடன் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சம்பந்தப்பட்ட வீட்டுக்கு சென்றனர். அங்கு துர்நாற்றம் வீசியது. அவர்கள் முகக்கவசம் அணிந்தபடி அந்த வீட்டிற்குள் சென்று தேங்கிக் கிடந்த குப்பை மற்றும்கழிவுகளைஅகற்ற முயன்றனர். அவர்களிடம் அந்த மூதாட்டி வாக்குவாதம் செய்தார். ஆனால் அதை பொருட்படுத்தாமல் தூய்மை பணியாளர்கள் அந்த வீட்டிற்குள் குவிந்து கிடந்த உணவு கழிவுகள், பழைய துணி, காகிதங்கள் என 3 டன் குப்பை, கழிவுகளை அகற்றி மூட்டை மூட்டையாக கட்டினர். பின்னர் அந்த வீட்டில் கிருமிநாசினி தெளித்தனர்.

வீடு முழுக்க குப்பை கழிவுகள் தேங்கி துர்நாற்றம் வீசிய போதும் அடுக்குமாடியில் மற்ற வீடுகளில் குடியிருப்பவர்கள் ஏன் வெளியில் சொல்லவில்லை என்று மாநகராட்சி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். விசாரணையில் மூதாட்டியின் கணவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். அதன்பிறகு மன அழுத்தம் காரணமாக அவர்கள் இது போன்று நடந்து இருக்கலாம் என தெரிகிறது. மூதாட்டியின் மகள் முதுகலை பட்டதாரி என கூறப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7 அடி உயர்வு



சேலம், ஜூலை 23

கர்நாடகாவில் தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. கடலோர மாவட்டங்கள் மற்றும் மலை மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழையின் காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. குடகு மாவட்டத்தில் தயார் நிலையில் பேரிடர் மீட்பு குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பல்வேறு ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் காவிரி மற்றும் பல்வேறு ஆறுகளின் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்து காணப்படுவதால் தமிழக எல்லையான பிலிகுண்டு பகுதிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இந்த தண்ணீர் நேரமாக காவிரி ஆற்றில் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7.6 அடி உயர்ந்துள்ளது.

ஒரே வாரத்தில் 26.15 அடி உயர்ந்துள்ளது. நேற்று நீர் வரத்து வினாடிக்கு 68,843 கனஅடியாக இருந்த நிலையில், இன்று மேலும்அதிகரித்து 71,777 கன அடியாக உள்ளது. தற்போது அணையின் தற்போதைய நீர்மட்டம் 68.91 அடியாக உள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# காசிமேட்டில் அதிகாலையிலேயே குவிந்த மீன் பிரியர்கள்

சென்னை, ஜூலை 23

சென்னை காசிமேடு மீன்பிடி சந்தையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களில் திருவிழா போன்று கூட்டம் அலை மோதுவது வழக்கம்.

அந்த வகையில், இன்று வார விடுமுறையையொட்டி காசிமேடு மீன் சந்தையில் மீன் பிரியர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலை முதலே மீன்கள் வாங்குவதற்காக காசிமேட்டில் குவிந்த மக்கள், தங்களுக்கு தேவையான மீன்களை வாங்கி வருகின்றனர்.



# மின் கட்டண உயர்வைக் கண்டித்து நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 23

தமிழகத்தில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளது.

அத்துடன், உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணத்தை நிறுத்த வேண்டும் என பல்வேறு கட்சிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், மின் கட்டண உயர்வைக் கண்டித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் இன்று காலை 10 மணிக்கு நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர். சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக கூறி அதனை கண்டித்தும் நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

# ஞாயிறு விடுமுறை: கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

குமரி, ஜூலை 23

உலக புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகை தருவது வழக்கம்.

அதன்படி ஞாயிறு விடுமுறையான இன்று அதிகாலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரியில் குவிந்தனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் திரண்டு சூரியன் உதயமான காட்சியை கண்டு ரசித்தனர். தொடர்ந்து அவர்கள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமிதரிசனம் செய்து வருகின்றனர்.

கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் கண்டு களித்து வருகின்றனர். சுற்றுலா பயணிகளின் வருகையால் கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், அரசு அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், விவேகானந்தா கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா கோவில், ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், மீன்காட்சி சாலை, அரசு பழத்தோட்டம், சுற்றுச்சூழல் பூங்கா, திருப்பதி வெங்கடாசலபதி கோவில் போன்றவற்றில் காலை முதலே கூட்டம் நிரம்பி வழிகிறது.

சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருப்பதால் கடற்கரையில் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# வரதட்சணை கொடுமை: குழந்தையுடன் பெண் தற்கொலை; கணவர் கைது

வேலூர், ஜூலை23

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவை அடுத்த கந்தனேரி பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த வரதராஜன் என்பவர் மகன் குமார் (வயது 30). வேலூரில் கார் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி பிரவீனா கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் 6ந் தேதி தனது ஒரு வயது பெண் குழந்தையை இடுப்பில் கட்டிக்கொண்டு விவசாய கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். திருமணமாகி 2 ஆண்டுகளே ஆன நிலையில் ஆண்டுகளே ஆனதால் பிரவீனா தற்கொலை செய்ததால் அது குறித்து வேலூர் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு வந்தார்.

இதில் பிரவீனாவை அவரது கணவர் குமார் மற்றும் மாமியார் ஆகியோர் வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தியதால் மனம் உடைந்து போன பிரவீனா தனது குழந்தையுடன் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது இதனையடுத்து குமாரை கைது செய்யுமாறு வேலூர் மாவட்ட உதவி போலீஸ் சூப்பிரண்டுக்கு பரிந்துரை செய்தார். இதனையடுத்து மனைவியை தற்கொலைக்கு தூண்டியதாக குமாரை பள்ளிகொண்டா போலீஸ் இன்ஸ்பெக்டர் கைது செய்தார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
23.7.2024

# அமிதாப்பச்சனுடன் நடித்த படம் கைவிடப்பட்டதா? எஸ்.ஜே.சூர்யா விளக்கம்



சில வருடங்களுக்கு முன்பு அமிதாப்பச்சனுடன் இணைந்து 'உயர்ந்த மனிதன்' படத்தில் நடிக்க இருப்பதாக எஸ்.ஜே.சூர்யா அறிவித்தார்.

தமிழ் திரையுலகின் பிரபல இயக்குனரான எஸ். ஜே.சூர்யா கதாநாயகனாகவும் வில்லனாகவும் நடித்து வருகிறார். சில வருடங்களுக்கு முன்பு இந்தி நடிகர் அமிதாப்பச்சனுடன் இணைந்து 'உயர்ந்த மனிதன்' என்ற படத்தில் நடிக்க இருப்பதாக எஸ்.ஜே.சூர்யா அறிவித்தார். தமிழ், தெலுங்கில் தயாரான இந்த படத்தை தமிழ்வாணன் இயக்கினார்.

ஆனால் படப்பிடிப்பை தொடங்கிய சில நாட்களிலேயே தயாரிப்பாளருடன் ஏற்பட்ட மோதலால் படத்தில் இருந்து அமிதாப்பச்சன் விலகியதாக கூறப்பட்டது. இதனால் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. இதுவரை அந்த படத்தை மீண்டும் தொடங்கவில்லை. படம் கைவிடப்பட்டதா என்று கேள்விகள் எழுப்பப்பட்டு வந்தன.

இதற்கு பதில் அளித்து எஸ்.ஜே.சூர்யா அளித்துள்ள பேட்டியில், "நான் 'உயர்ந்த மனிதன்' படத்தை எடுக்க நிறைய கஷ்டப்பட்டு விட்டேன். அந்த படத்துக்காக இயக்குனருடன் கதை விவாதத்தில் ஈடுபட்டு படப்பிடிப்பை தொடங்கிய நிலையில் சில பிரச்சினைகளால் நின்றுபோனது. கடவுள் ஏன் கஷ்டத்தை கொடுத்தார் என்று தெரியவில்லை. நிச்சயம் அந்த படத்தை எடுப்பேன். அமிதாப்பச்சன் அதில் நடிப்பார்" என்று கூறினார்.

# நீச்சல் உடையில் ரசிகர்களை அதிர வைத்த கனிகா



கதாநாயகிகள் கவர்ச்சிக்கு மாறி வருகிறார்கள். படுக்கை அறை மற்றும் முத்த காட்சிகளில் துணிச்சலாகவும் நடிக்கின்றனர். அதோடு நீச்சல் உடை கவர்ச்சி புகைப்படங்களை வலைத்தளத்தில் வெளியிட்டும் பரபரப்பு ஏற்படுத்துகின்றனர். இதில் தற்போது நடிகை கனிகாவும் இணைந்துள்ளார். இவர் அஜித்குமாரின் வரலாறு, சேரனின் ஆட்டோகிராப், விஜய்சேதுபதியுடன் யாதும் ஊரே யாவரும் கேளிர், சத்யராஜின் வெப்பன் ஆகிய படங்களில் நடித்துள்ளார். மலையாளம், தெலுங்கு மொழியிலும் அதிக படங்களில் நடித்து பிரபல நடிகையாக இருக்கிறார். தொலைக்காட்சி தொடரிலும் நடிக்கிறார்.

இவற்றில் குடும்ப பாங்காக நடித்துள்ள கனிகா திடீரென தனது நீச்சல் உடை புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு ரசிகர்களை அதிர வைத்துள்ளார். கவர்ச்சி புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் கடைசியில் நீங்களும் பிகினிக்கு மாறி விட்டீர்களா என்று கமெண்ட் பகுதியில் பதிவுகள் வெளியிட்டு வருகிறார்கள்.

# சர்பிரா படக்குழுவினரை பாராட்டிய துல்கர் சல்மான்



நடிகர் சூர்யா நடிப்பில் கடந்த 2020ம் ஆண்டு வெளியான திரைப்படம் சூரரைப் போற்று. இந்தியாவின் வானூர்தி சேவையை தொடங்க நினைத்து அதில் வெற்றியும் பெற்ற கோபிநாத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டது. இத்திரைப்படம் மாபெரும் வெற்றிப்படமாக ஹிட் அடித்தது. மக்களிடம் நல்ல வரவேற்பையும் பெற்றது.

தற்போது, இந்த படத்தை இயக்குனர் சுதா கொங்கரா இந்தியில் 'சர்பிரா' என்ற பெயரில் ரீமேக் செய்து இருக்கிறார். இதில் அக்சய் குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். ராதா கதாநாயகியாக நடித்து இருக்கிறார். மேலும் இப்படத்தில் சூர்யா சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார்.

இத்திரைப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைக்க, சூர்யாவின் 2டி நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப்படம் கடந்த 12ந் தேதி திரையரங்குகளில் வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

இந்தநிலையில் நடிகர் துல்கர் சல்மான் இப்படத்தினை குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் "ஒரு கிளாசிக் படத்தை வேறொரு மொழியில் மறுவடிவமைப்பது எப்போதுமே மிகவும் கடினம்" ஆனால், படத்தின் இயக்குனர் சுதா கொங்கரா, ரீமேக்கை உண்மையானதாகவும், மக்களுக்கு உணரவைப்பதில் சிறந்தவர் என்று பாராட்டினார். மேலும், அக்சய் குமாரின் நேர்மை, ராதிகா மதனின் மகிழ்ச்சிகரமான மனநிலை மற்றும் சீமா பிஸ்வாஸின் உணர்வுபூர்வமாக சித்தரிப்பு ஆகியவற்றை பாராட்டி பதிவிட்டுள்ளார்.

# 'டெட்பூல் & வோல்வரின்' படத்தின் பைனல் டிரெய்லர் வெளியீடு




மார்வெல் படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக, அவெஞ்சர்ஸ் படம் அனைவருக்கும் பிடித்த படமாக உள்ளது. அதில் வரும் ஹீரோக்களுக்கும் உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். அயர்ன் மேன், ஹல்க், தோர், ஸ்பைடர் மேன், கேப்டன் அமெரிக்கா, நடாசா உள்ளிட்ட கதாபாத்திரங்களுக்கு இணையாக வோல்வரின் மற்றும் டெட்பூல் கதாபாத்திரங்களுக்கும் ரசிகர்கள் உள்ளனர்.

தற்போது, வோல்வரின் மற்றும் டெட்பூல் பாத்திரங்களை ஒன்றிணைத்து 'டெட்பூல் & வோல்வரின்' படம் உருவாகியுள்ளது. இது இதற்கு முன்னதாக வந்த டெட்பூல் மற்றும் டெட்பூல் 2 ஆகிய படங்களின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை பிரபல இயக்குனர் ஷான் லெவி இயக்கியுள்ளார். இதில், ஹியூ ஜேக்மேன் வோல்வரினாகவும், ரியான் ரெனால்ட்ஸ் டெட்பூலாகவும் நடித்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று பைனல் டிரெய்லரை மார்வெல் ஸ்டுடியோஸ் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். மேலும் 'டெட்பூல் & வோல்வரின்' திரையரங்குகளில் வரும் 26ம் தேதி தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளது.

# நகுலின் 'வாஸ்கோடகாமா' டிரெய்லர் வெளியானது



நடிகை தேவயானியின் இளைய சகோதரர் நகுல், சங்கர் இயக்கிய 'பாய்ஸ்' 'படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் ஆவார். நகுல் நடிப்பில் கடந்த 2008 ம் வெளியான 'காதலில் விழுந்தேன்' படம் அவருக்கு தமிழ் சினிமாவில் ஹீரோ அந்தஸ்த்தைப் பெற்றுத் தந்தது. இதைத்தொடர்ந்து மாசிலாமணி, தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும், வல்லினம், நான் ராஜாவாகப் போகிறேன் உள்ளிட்ட படங்களில் நடித்தார்.

தற்போது டி3 இயக்குனர் பாலாஜி இயக்கத்தில் 'திடார்க் ஹெவன்' படத்தில் நகுல் நடித்து வருகிறார். இந்நிலையில் அறிமுக இயக்குனர் ஆர்.ஜி கிருஷ்ணன் இயக்கத்தில் நகுல் நடித்து வெகுநாட்களாக ரிலீஸ் ஆகாமல் கிடப்பில் இருந்த 'வாஸ்கோடகாமா' திரைப்படம் வரும் ஆகஸ்ட் 2ம் தேதி திரைக்கு வர உள்ளது. இந்த படத்தில் இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார், நடிகர் முனீஸ்காந்த் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அருண் என்.வி. இசையமைத்துள்ள இந்த படத்திற்கு எம்எஸ் சதீஷ் குமார் ஒளிப்பதிவு செய்ய, தமிழ் குமரன் படத்தொகுப்பு செய்திருக்கிறார். உறியடி, உறியடி 2, பைட் கிளப் போன்ற படங்களில் கலை இயக்குனராக பணியாற்றிய ஏழுமலை ஆதிகேசவன் இந்த படத்திற்கு கலை இயக்க பணிகளை மேற்கொண்டுள்ளார். 'வாஸ்கோடகாமா' திரைப்படத்திற்கு தணிக்கை குழு 'யு' சான்று வழங்கி உள்ளது. இந்த நிலையில் 'வாஸ்கோடகாமா' படத்தின் டிரெய்லர் நேற்று வெளியானது. இந்த டிரெய்லரில் இடம்பெற்றுள்ள வசனம் கவனம் பெற்றுள்ளது. மனிதர்களை பிரித்து.. நாட்டின் அமைதியை குலைப்பேன்.." என்கிற வசனங்களோடு படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது.

# படத்தில் சம்பளம் எனக்கு முக்கியமில்லை, இதுதான் முக்கியம் நடிகை கரீனா கபூர்



பாலிவுட் நடிகர்களில் மிக முக்கியமான நட்சத்திரங்களில் ஒருவர் கரீனா கபூர். இவர் பாலிவுட்டில் அதிகம் சம்பாதிக்கும் நடிகைகளில் ஒருவராக உள்ளார். இவர் கடைசியாக 'க்ரூ' என்ற படத்தில் நடித்தார். இதில் தபு, கபில் சர்மா மற்றும் கிருத்தி சனோன் ஆகியோருடன் நடித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு நேர்காணலில், தனது 20 ஆண்டுகால திரைப்பட வாழ்க்கையைப் பற்றி பேசியுள்ளார். அதில், தான் எப்போதும் படத்தின் தரம் மற்றும் கதாபாத்திரத்தின் மீதான ஆர்வம் ஆகியவற்றிற்கு மட்டுமே முன்னுரிமை அளிப்பதாக கூறினார். தான் எப்போதும் சம்பளத்தில் கவனம் செலுத்துவதில்லை என்று கூறினார். தனக்கு சம்பளத்தை விட தனிப்பட்ட திருப்தி மற்றும் கதாபாத்திரத்தின் தரம் ஆகியவை முக்கியம் என குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இவர் 'சிங்கம் அகைன்' படத்தில் நடித்துள்ளார். இதில் அஜய் தேவ்கன், அக்ஷய் குமார், ரன்வீர் சிங் மற்றும் தீபிகா படுகோன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்தப்படத்தினை வருகிற நவம்பர் 1ந் தேதி வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் ஆசிய கோப்பை: நேபாளத்தை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்த பாகிஸ்தான்



9வது மகளிர் ஆசிய கோப்பை தொடரில் நடைபெற்ற 6வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் நேபாளம் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற பாகிஸ்தான் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த நேபாளம், பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளித்து அதிரடியாக விளையாட முடியாமல் திணறியது. 20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய நேபாளம் 6 விக்கெட்டுகளை இழந்து 108 ரன்கள் மட்டுமே அடித்தது. அதிகபட்சமாக கபிதா ஜோஷி 31 ரன்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சாடியா இக்பால் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 109 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன குல் பெரோசாக் மற்றும் முனீபா அலி அதிரடியாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றனர். அதிரடியாக விளையாடி அரைசதம் அடித்த குல் பெரோசாக் இலக்கை நெருங்கிய தருவாயில் ஆட்டமிழந்தார். வெறும் 11.5 ஓவர்களிலேயே 1 விக்கெட்டை மட்டுமே இழந்த பாகிஸ்தான் 110 ரன்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது. முனீபா அலி 46 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

நடப்பு தொடரில் பாகிஸ்தான் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். முன்னதாக நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தோல்வியடைந்திருந்தது.

# டெஸ்ட் கிரிக்கெட்: வில்லியம்சன், ஸ்டீவ் சுமித் ஆகியோரின் சாதனையை சமன் செய்த ஜோ ரூட்



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி நாட்டிங்ஹாமில் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து பேட்டிங்கை தொடங்கிய இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 416 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி 457 ரன்கள் அடித்தது. இதனையடுத்து 41 ரன்கள் பின்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து ஜோ ரூட் மற்றும் ஹாரி புரூக்கின் அபார சதத்தின் உதவியுடன் 425 ரன்கள் குவித்தது.



இதன் மூலம் இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு 385 ரன்களை இலக்காக நிர்ணயித்துள்ளது.

இந்த போட்டியில் ஜோ ரூட் அடித்த சதம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் அடித்த 32வது சதமாக பதிவானது. இதன் மூலம் தற்போது விளையாடும் வீரர்களில் (ஓய்வு பெற்ற வீரர்களை தவிர்த்து) அதிக சதங்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த வில்லியம்சன் மற்றும் ஸ்டீவ் சுமித் ஆகியோரின் சாதனையை சமன் செய்துள்ளார். இந்த பட்டியலில் 29 சதங்களுடன் விராட் கோலி 2வது இடத்தில் உள்ளார்.

# மாநில துப்பாக்கி சுடும் போட்டி: மதுரை வீராங்கனை 12 பதக்கங்கள் வென்று சாதனை



கோவை பி.ஆர்.எஸ். பயிற்சி பள்ளி வளாகத்தில் கோவை ரைபிள் சங்கம் சார்பில் 49வது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடும் போட்டி கடந்த 15ந் தேதி தொடங்கி நடந்து வருகிறது. அதில் நேற்று வரை ரைபிள் பிரிவு போட்டிகள் நடைபெற்றன. இன்று (திங்கட்கிழமை) முதல் 26ந் தேதி வரை பிஸ்டல் பிரிவு போட்டிகள் நடைபெற உள்ளன.

ஏர் ரைபிள் 50 மீட்டர், பிஸ்டல் 25 மீட்டர் உள்ளிட்ட பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் கோவை, மதுரை உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 1,650 பேர் பங்கேற்றனர். 15ந் தேதி முதல் நேற்று வரை நடந்த ரைபிள் பிரிவு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. மதுரை ரைபிள் கிளப்பை சேர்ந்த வீராங்கனை மெல்வீனா ஏஞ்சலின் (18 வயது) என்பவர் 50 மீட்டர் ரைபிள், 10 மீட்டர் ஏர் ரைபிள் ஆகிய பிரிவுகளில் பங்கேற்று அதிகபட்சமாக 11 தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் என 12 பதக்கங்களை வென்று அசத்தினார்.

இது குறித்து அவர் கூறும்போது, நான் கடந்த 6 ஆண்டுகளாக பயிற்சி எடுத்து வருகிறேன். வேலு சங்கர் என்ற பயிற்சியாளர் எனக்கு நல்ல முறையில் பயிற்சி அளித்து வருகிறார். நான் தேசிய அளவில், உலக அளவில் பங்கேற்று 75க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று உள்ளேன் என்றார்.

கோவை ரைபிள் கிளப்பை சேர்ந்த இலக்கியா 6 பதக்கங்களும், சுதீஷ்னா 5 பதக்கங்களும் பெற்றனர். கோவை விமானப்படை நிர்வாகக் கல்லூரி ஏர்கமாண்டன்ட் விகாஸ்வகி, கோவை மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கி பாராட்டினர். இதில் 600 பேருக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

# டி.என்.பி.எல். கிரிக்கெட்: சேலம் அணியை எளிதில் வீழ்த்தி திருப்பூர் வெற்றி

டி.என்.பி.எல். தொடரில் இன்று நடைபெற்ற 2வது லீக் ஆட்டத்தில் திருப்பூர் தமிழன்ஸ் சேலம் ஸ்பார்ட்டன்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற திருப்பூர் அணி பேட்டிங் தேர்வு செய்தது. அந்த அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய சாத்விக் துஷார் ரஹேஜா இணை சிறப்பாக விளையாடி வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இருவரும் அரைசதம் அடித்த நிலையில் சாத்விக் 50 ரன்களிலும், துஷார் 79 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அவர்களுக்கு பின் களமிறங்கிய வீரர்களில் ஒரு பேட்ஸ்மேன் கூட 20 ரன்களை தாண்டவில்லை. இத னால் 200 ரன்களை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட அந்த அணி 192 ரன்களில் கட்டுப்படுத்தப்பட்டது. 20 ஓவர்கள் முடிவில் திருப்பூர் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 192 ரன்கள் குவித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக துஷார் ரஹேஜா 79 ரன்களும், சாத்விக் 50 ரன்களும் அடித்தனர். சேலம் தரப்பில் அதிகபட்சமாக பொய்யாமொழி மற்றும் குரு சாயி தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனையடுத்து 193 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சேலம் அணி பேட்டிங் செய்தது. அந்த அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அபிஷேக் 1 ரன்னிலும் முகமது அத்னான் கான் ரன் எதுவும் எடுக்காமலும் அவுட்டாகி அதிர்ச்சியளித்தனர். அடுத்து வந்த விஷால் வைத்யா சிறப்பாக விளையாடி 35 ரன்கள் எடுத்து அவுட்டானார். பின்னர் வந்த ரவி ராஜன், ஹரிஷ் குமார் சிறப்பாக விளையாடினர். ஹரிஷ் குமார் 32 ரன்களில் ஆட்டமிழந்தார். ரவி ராஜன் அரைசதம் கடந்தார். இருப்பினும், 20 ஓவர்கள் முடிவில் சேலம் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்த நிலையில் 51 ரன்கள் வித்தியாசத்தில் சேலம் அணியை வீழ்த்தி திருப்பூர் தமிழன்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.



**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு**

**விளக்கம்:**
ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார்நீருண்ணும்குளம்நீரால்நிறைந்தாற் போன்றது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.